செ.வெ.எண்-46 நாள்-28.07.2021

## அரியலூர் மாவட்டம்

## அரியலூர் மாவட்டத்தின் குறியீடாக பட்டுப்புடவை உற்பத்தியை உருவாக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட நல்லாம்பாளையம் மற்றும் உஞ்சினி ஊராட்சிகளில் தொடக்க பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் பட்டு புடவைகள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படுவதையும், உஞ்சினி கிராமத்திலிருந்து கீழராயம்புரம் வரை பிரதம மந்திரி கிராம சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வரும் சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிகளையும், சிறுகட்மபூர் ஊராட்சியில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் மூலமாக பனை ஓலைகளால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப்பொருட்கள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (28.07.2021) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

இவ்வாய்வின்போது, உஞ்சினி மற்றும் நல்லாம்பாளையம் கிராமங்களில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் மூலமாக தங்களது இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பட்டுப்புடவைகள் குறித்து ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், காஞ்சிபுரம், கும்பகோணம், திருபுவணம் உள்ளிட்ட நகரங்களுக்கு இணையாக அரியலூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளின் தரத்தை மேம்படுத்திடவும், இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளை மாநில அளவில் விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், இப்பகுதிகளில் தினக்கூலி அடிப்படையில் நெசவு தொழிலில் ஈடுபட்டு வரும் மகளிர் சுயஉதவிக்குழுவினரை சார்ந்த மகளிர் அனைவரும் சுயமாக தொழில் தொடங்கி, தாமாகவே பட்டுப்புடவை உற்பத்தி தொழிலில் ஈடுபட அவர்களுக்கு தேவையான முதலீடுகளை ஏற்பாடு செய்வதற்கும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும், அரியலூர் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளை உலக தரத்திற்கு உற்பத்தி செய்து, அரியலூர் மாவட்டத்தின் குறியீடாக பட்டுப்புடவை உற்பத்தியை உருவாக்க வேண்டும் என மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, உஞ்சினி குழுகூட்டமைப்பு மூலம் 7 குழுக்களைச் சேர்ந்த 57 நபர்களுக்கு நெசவு தொழிலில் ஈடுபடுதல், விற்பனை செய்தல் மற்றும் கவரிங் நகை செய்தல் உள்ளிட்ட தொழில்களை மேற்கொள்வதற்காக ரூ.8 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் பிரதம மந்திரியின் கிராம சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உஞ்சினி முதல் கீழராயம்புரம் வரை 3.22 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் தார்சாலை பணிகளையும், 3 சிறுபாலம் அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், பணியின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக சாலையில் அரசு நிர்ணயித்துள்ள அளவில் கட்டுமான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், இச்சாலை பணிகளில் உயர்ந்த தரத்துடன் விரைந்து முடித்து, குறிப்பிட்ட காலத்திற்குள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, சிறுகடம்பூர் ஊராட்சியில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் மூலமாக பனை ஓலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு, வைக்கப்பட்டுள்ள கைவினைப் பொருட்களை பார்வையிட்டு, மகளிர் சுயஉதவிக்குழுவினரின் தேவைகளை கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், மகளிர் சுயஉதவிக்குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் கைப்பை, கூடைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை குறித்து கேட்டறிந்தார்கள். மேலும், இவ்வழகு சாதனப் பொருட்களை அதிக அளவு சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு ஏற்படுத்தி தரவும், மற்ற பகுதிகளிலுள்ள மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கும் இதுபோன்ற பயிற்சி அளித்து, அவர்களும் கைவினைப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டு வருமானம் ஈட்டுவதற்கும் வழிவகை செய்திட தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். எனவே, கிராமப்புறங்களின் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும் பெண்கள் அனைவரும் இதுபோன்ற தொழில்களை கற்று தங்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட அலுவலர் (மகளிர்திட்டம்) கு.செல்வராசு, செயற்பொறியாளர் ராஜராஜன், உதவி செயற்பொறியாளர் சீதாலெட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் சிவாஜி, உதவிப்பொறியாளர்கள் வைதேகி, சுமதி மற்றும் அரசு அலுவலர்கள், ஊராட்சி மன்றத்தலைவர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**